எஸ்.டி.சி எண். 318/2021 தேதி:28/01/2025

<u>ம.சா.1 ஆன திரு. சுரேஷ் என்பவர் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.</u>

1. நான் ஐயப்பாக்கத்தில் வசித்து வருகிறேன் எனது முகவரி கதவு எண். 5891, TNHB சாலை, TNHB காலனி, TNHB Housing Board, சென்னை- 77. 25.04.2024 ஆம் தேதியிலிருந்து நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். அதற்கு முன்பு நான் கதவு எண். 5/125, பர்நர் சாலை, முகப்பேர் கிழக்கு, சென்னை - 37 என்ற முகவரியில் வசித்து வந்தேன். இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ள புகார் மற்றும் பிரமாண வாக்குமூலத்தை நான் படித்துப் பார்த்து தான் தாக்கல் செய்தேன். புகார் மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் இருந்த சங்கதிகள் எனக்குத் தெரியும். நான் எனது புகார் மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் பொய்யான தகவல் எதுவும் சொல்லவில்லை. நான் புகார் மற்றும் பிரமாண வாக்குமூலத்துடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்களின் விவரங்கள் தெரிந்து தான் தாக்கல் செய்தேன். நான் 25.04.2024 ஆம் தேதியே முகப்பேர் முகவரியிலிருந்து மாறி விட்டேன் என்றாலும் ஆனால் 2.05.2024 அன்று தாக்கல் செய்த எனது பிரமாண வாக்குமூலத்தில் பழைய முகவரியே குறிப்பிட்டு தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் நான் எனது ஆவணங்கள் எதிலும் முகவரியை மாற்றம் செய்யாததால் பிரமாண வாக்குமூலத்திலும் பழைய முகவரியையே குறிப்பிட்டேன். நான் எனது சத்திய பிரமாண வாக்குமூலத்தில் நான் அப்போது வசித்து வந்த முகவரியை தான் குறிப்பிட்டு இருக்க வேண்டும் என்றாலும் ஆனால் அதற்கு மாறாக பொய்யான முகவரியை குறிப்பிட்டு பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன் என்றால்

சரியல்ல. நான் டிப்ளமோ மெக்கானிக்கல் இன்ஜினியரிங் படித்துள்ளேன். நான் Air Craft Technician ஆக பணிபுரிந்து வருகிறேன். எண்.11, Callshot Road, Saesl Private Ltd, Singapore என்ற முகவரியில் தான் எனது நிறுவனம் உள்ளது. நான் கடந்த 2 வருடங்களாக மேற்கண்ட நிறுவனத்தில் பணிபுரிந்து வருகிறேன். இந்திய மதிப்பில் எனது மாத வருமானம் சுமார் ஒரு லட்சத்து முப்பது ஆயிரம் இருக்கும். 2018 டிசம்பர் – 2019 ஜனவரி ஆம் காலத்தில் நான் சிங்கப்புரில் தான் வேலை செய்தேன் வருமானம் சரியாக ஞாபகமில்லை. சிங்கப்பூரில் உள்ள Barnes Aerospace என்ற நிறுவனத்தில் நான் 2018 ஆம் ஆண்டு வேலை பார்த்தேன். 2018 ஆம் ஆண்டு டிசம்பர் இரண்டு அல்லது மூன்றாம் வாரத்தில் நான் இந்தியா வந்துவிட்டேன்.

2. நான் வருமான வரி தாக்கல் செய்து வருகிறேன். 2018-2019 ஆம் ஆண்டுக்கு நான் வருமான வரி தாக்கல் செய்தேனா என்றால் எனது நிறுவனத்தில் ஊதியத்திலிருந்து பிடித்தம் செய்து தாக்கல் செய்துவிடுவார்கள் நான் தனியாக தாக்கல் செய்யவில்லை. 2019 ஆம் ஆண்டு நான் வருமானவரி தாக்கல் செய்தேனா என்றால் 2019 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் வரை நான் வேலை இல்லாமல் இருந்தேன் அதனால் தாக்கல் செய்யவில்லை. வழக்கின் எதிரியை சுமார் 20 வருடங்களாக எனக்குத் தெரியும். நான் எதிரிக்கு மொத்தம் எவ்வளவு தொகை கொடுத்தாக சொல்லப்படுகிறது என்றால் சுமார் பத்து லட்சம் கொடுத்துள்ளேன். 22.11.2018 அன்று 2,00,000/- அதிலிருந்து பின்பு 3,50,000/- ஒரு முறையும், 50,000/- ஒரு முறையும், 1,25,000/- ஒரு முறையும் கடைசியாக 2,75,000/- த்தை 7.01.2019 அன்று கொடுத்தேன். மேற்கண்ட தொகைகளை மணிகண்டன் கூறியபடி அவர் கொடுத்த வங்கி கணக்குகளுக்கு மாற்றம் செய்யப்பட்டது. மேற்கண்ட தொகைகளை வழங்கும்

போது சுமார் நான்கு முறை எனது வங்கியிலிருந்து பணம் மாற்றம் செய்யப்பட்டது. ஒரு முறை மட்டும் எனது நண்பர் ஒருவர் (சுதாகர்) மூலமாக எதிரி கூறிய வங்கி கணக்கிற்கு மாற்றம் செய்யப்பட்டது. மேற்கண்ட தொகை செலுத்தியதாக கூறப்படும் விவரங்களை குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் அதுகுறித்து ஞாபகம் இல்லை. வழக்கறிஞர் அறிவிப்பு என்று கொடுக்கப்பட்டது என்ற தேதி ஞாபகம் இல்லை. தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் வழக்கறிஞர் அறிவிப்பானது இதற்கு முன்பு இருந்த எனது வழக்கறிஞர் தான் அனுப்பினார். மேற்கண்ட ஆவணம் எ.ம.சா.ஆ.1 ஆகும். எ.ம.சா.ஆ.1 -ல் தேதி காணப்படவில்லை. எ.ம.சா.ஆ.1 ல் நான் கொடுத்ததாக சொல்லப்படும் தொகைகளை தேதியிட்டு பிரித்து காண்பிக்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை. இவ்வழக்கின் எதிரி அளித்த பதிலறிவிப்பை நான் பெற்றுக் கொண்டேனா என்றால் எனது வழக்கறிஞர் தான் பெற்றுக் கொண்டார். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்புகை அட்டையில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அது எ.ம.சா.ஆ.2 ஆகும். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் பதில் அறிவிப்பை தான் எதிரி எனக்கு அனுப்பினாரா என்றால் சரிதான். அந்த பதில் அறிவிப்பு எ.ம.சா.ஆ 3 ஆகும். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் வழக்கறிஞர் அறிவிப்பில் (ம,சா.ஆ.3) ல் தேதியை பின்னர் பூர்த்தி செய்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் அது குறித்து எனக்குத் தெரியவில்லை. 07.01.2019 அன்று நான் எதிரிக்கு கொடுத்ததாக சொல்லப்படும் கடைசி தொகையையும் சேர்த்து தான் ரூபாய் 10,00,000/- என்று சொன்னால் சரிதான். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் ம.சா.ஆ.6 தான் எதிரி என்வசம் கொடுத்த கடன் பத்திரம் ஆகும். ம.சா.ஆ.6 ல் முதல் பக்கத்தில் நானும் எதிரியும் கையொப்பம்

செய்துள்ளோம். இடது பக்கத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது வலது பக்கத்தில் உள்ளது எதிரியுடையது. ம.சா.ஆ.6 ல் உள்ள சாட்சிகளில் சிவக்குமார் என்பவர் எதிரி அழைத்து வந்தார். சுதாகர் எனது நண்பர் ஆவார். ம.சா.ஆ.6 ல் சரத்துகளின் படி மணிகண்டன் மற்றும் மஞ்சுளா ஆகியோர் எனக்கு எழுதி கொடுப்பதாக காணப்படும் நிலையில் மஞ்சுளா என்பவர் கையொப்பம் அதில் இல்லை என்று சொன்னால் மஞ்சுளா என்பவர் கையொப்பம் செய்ய மறுத்துவிட்டார் . எதிரி கூறியதின் பேரில் மஞ்சுளாவின் வங்கி கணக்கிற்கும் பணம் மாற்றம் செய்துள்ளேன். எதிரி முழு பொறுப்பையும் ஏற்றுக் கொள்வதாக கூறி அவர் மட்டும் கையொப்பம் செய்தார். மஞ்சுளா என்பவர் ஏன் கையொப்பம் செய்யவில்லை என்றால் அதுகுறித்து எதிரியிடம் தான் கேட்க வேண்டும்..

( வழக்கறிஞர் தரப்பு வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.)

(S/d. Tmt.A.Theviya)
Judicial Magistrate,
Fast Track Court,
Ambattur.

// True Copy //

(S/d. Tmt.A.Theviya)
Judicial Magistrate,
Fast Track Court,
Ambattur.